Registered as a Newspaper

A/L Day Class
இப்பொழுது
நடைபெறுகின்றன
8-15 — Physics
9-15 — Chemistry
10-30 — Zoology
10-30 — App Maths
11-30 — Botany
11-30 — Pure Maths
Bond INSTITUTION
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L DAY CLASS
(வார நாட்களில்)
Physics -
Mr நந்தகுமார் B. Sc.
Chemistry -
Mr. Bar B. Sc.
Zoology -
Mr. ஈசன் B. Sc.
Botany -
Mr. கதிர்காமநாதன் B.Ss
Pure Maths.- App Mathc
Mr. சந்திரமோகன் B.S c
Bond INSTITUTION

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ மார்கழி மீ 13 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 25 (28-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 27

முதன் முறையாக

# அரச குழுவும் புலிகளும் நேரில்

# இருமணி நேர இரகசியப் பேச்சு

## இனிமேல் பேச 3 நிபந்தனைகள்

- 3,000 அப்பாவித் தமிழரை உடன் விடுவிக்க வேண்டும்
- மலையகத் தமிழர், முஸ்லிம்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்
- கடல்வலய எல்லையை விஸ்தரிக்க வேண்டும்

—அலுவலகச் செய்தியாளர்கள்: கே. இரத்தினராஜசிங்கம், பி. ரட்ணதுரை—

யாழ்ப்பாணம், டிச. 28

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் மற்றொரு சரித்திரம் நேற்றுப் படைக்கப்பட்டது.

அரசாங்க எம். பி. ஒருவரது தலைமையில் வந்த நல்லெண்ணத் தூதுக் குழு, காங்கேசன்துறையில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களுடன் இரண்டு மணி நேரம் இரகசியப் பேச்சுக்களை நடத்தியது.

இரு தரப்பாரும் நேரில் இலங்கையில் வைத்து பேச்சு நடத்தியது இதுவே முதற் தடவையாகும்.

இவ்வாறான பேச்சுகளை இனிமேல் நடத்துவதற்குத் தமது மூன்று கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று புலிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

1. சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை அரசாங்கம் உடனே விடுதலை செய்யவேண்டும்.

2. மலையகத் தமிழர், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஆகியோரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

3. யாழ். குடா கடல் வலயத்தில் மீன் பிடிக்கும் 100 மீட்டர் எல்லையை விஸ்தரித்து மீனவரின் வாழ்க்கைக்கு உதவ வேண்டும்.

இவையே புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள் ஆகும்.

காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் நேற்றுக் காலை அரசு நல்லெண்ணத் தூதுக் குழுவுக்கும் புலிகள் குழுவுக்கும் இடையே நடந்த இரகசியப் பேச்சுக்களின் போது இந்த நிபந்தனையைப் புலிகள் சமர்ப்பித்தனர்.

இரண்டு மணி நேர இரகசியப் பேச்சுக்களின் பின்னர் புலிகள் தளபதி திரு. கிட்டு, தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போதே அவர் தமது தரப்பின் மூன்று நிபந்தனைகள் பற்றித் தெரிவித்தார்.

சிறையில் உள்ள 3,000க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர் பற்றிய விவரங்களைத் தரும்படி அரசக் குழு கேட்டுக் கொண்டது. அதற்குப் புலிகள் சம்மதித்தனர்.

ஏனைய இரண்டு கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேசுவதாக அரசுக் குழு உறுதியளித்தது.

இத் தகவல்களை திரு. கிட்டு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(அ-எ-5-10)



புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நேற்று யாழ்ப்பாணம் வந்த நல்லெண்ணத் தூதுக்குழுவில் அங்கம் வகித்தவர்களைப் படத்தில் காணலாம்.

இடமிருந்து வலம்: சட்டத்தரணி மார்க் பெர்னாண்டோ, திரு. பீலிக்ஸ் டயஸ் அபயசிங்க, சட்டத்தரணி எம். ரகுமான், எட்டியாந்தோட்டை எம். பி. திரு. வின்சன்ட் பெரேரா, திரு. எஸ். அற்புதநாதன் கப்டன் ஜயந்தா கொத்தலாவல பின்னால் காணப்படுகிறார்.



வடபகுதிக்கு விஜயம் செய்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கையில் பிடிக்கப்பட்ட படம்.

படத்தின் நடுவில் இருப்பவர் கப்டன் கொத்தலாவல; அவருக்கு இடது பக்கம் இருப்பவர்கள் அரச தூதுக்குழுவினர், வலது பக்கம் இருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் குழுவினர்.

## கிட்டுவுக்கு முத்தம் கொடுத்து வரவேற்பு

யாழ்ப்பாணம், டிச. 28

நேற்று நல்லெண்ணக்குழு — புலிகள் சந்திப்புக்காக சிப்பாய்கள் யுத்த நிறுத்தம் மேற்கொண்டனர்.

அதே சமயம் குழுவினர் புலிகள் தளபதி கிட்டுவை முத்தம் கொடுத்து வரவேற்றனர்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள பட்டினசபைக்கு வந்த புலிகளின் தளபதி கிட்டுவை முத்தம் கொடுத்து வரவேற்றார் வின்செண்ட் பெரேரா. (இ-10-5)

## புலிகளின் வீடியோ கசெட் கேட்டு பெற்றுக்கொண்டனர்

யாழ்ப்பாணம், டிச. 28

நேற்றைய புலிகள் — நல்லெண்ணக் குழு சந்திப்பின் போது புலிகளின் வீடியோ கசெட்டுகளை குழுவினர் புலிகளிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டனர்.

விஜய குமாரணதுங்கவின் யாழ் விஜயம், கைதிகள் பரிமாற்றம் அடங்கிய கசெட்டுகளே குழுவிடம் கொடுக்கப்பட்டன என்று புலிகளின் தளபதி கிட்டு தெரிவித்தார். (இ-10-5)

## 'கவனமாகப் போய் வாருங்கள்' என்றார் கிட்டு

யாழ்ப்பாணம், டிச. 28

சிப்பாய்கள் சிலவேளை நல்லெண்ணக் குழுமீது தவறுதலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம். எனவே கவனமாகப் போய் வரவும்.

தளபதி கிட்டு கப்டன் கொத்தலாவலவிடம் இவ்வாறு தெரிவித்து வழி அனுப்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'வணக்கம் சென்று வருகிறேன்' என்று தமிழில் கூறி விடைபெற்றார்

யாழ்ப்பாணம், டிச. 28

நேற்று கொழும்பிலிருந்து வந்த நல்லெண்ணக் குழுவின் தலைவர் திரு. வின்சன்ட் பெரேரா பொதுமக்களுக்கு தமிழில் ''வணக்கம், சென்று வருகிறேன்'' எனக் கூறி

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைப் பற்றிப் புரிந்து கொண்டனர் சிங்கள மக்கள்

யாழ்ப்பாணம், டிச. 28

சிங்கள மக்கள் கைதிகள் பரிமாற்றம் மூலம் புலிகளைப் புரிந்து கொண்டுள்ளனர்.

யாழ் வந்த நல்லெண்ணக் குழுவினர் புலிகளிடம் இவ்வாறு கூறினர்.

போராளிகள் பயங்கரவாதிகள் அல்லர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செல்வம் தலைமையிலே உண்ணாவிரதம்

சென்னை, டிச. 27

தமிழ்நாடு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 108 போராளிகளை விடுவிக்கும்படி கோரி தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) தலைமைச் செயலாளர் ஏ. செல்வம் தலைமையில் 5 பேர் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்தி

(4-ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் நடத்திய பேச்சில் முன்னேற்றம்

## வின்சென்ட் பெரேரா கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 28

புலிகளுடன் நடத்திய பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டு—இப்படி அரச நல்லெண்ணத் தூதுக் குழுத் தலைவரான எட்டியாந்தோட்டை எம். பி. திரு. வின்சென்ட் பெரேரா உதயனுக்குத் தெரிவித்தார்.

புலிகள் குழுவுடன் இரகசியப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு வெளியே வந்த திரு. வின்சன்ட் பெரேராவை உதயன் செய்தியாளர் பேட்டி கண்டார்.

கேள்வி: பேச்சுக்கள் பற்றி பத்திரிகைகளுக்கு ஏதும் கூற முடியுமா?

பதில்: இது இரகசியப் பேச்சு. ஒன்றும் கூறமுடியாதுள்ளது.

கேள்வி: பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டதா?

பதில்: ஏன் இல்லை!

கேள்வி: பேச்சுக்கள் என்ன அடிப்படையில் நடந்தன?

பதில்: நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும்

(4-ம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

28-12—1986
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்: 9·28முதல் - 10·58வரை

ராகுகாலம்: 4·58 முதல் - 6·28 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

# இலங்கை அரசாங்கத்தை நம்பி நாம் தனித்துப் பேச முடியாது

## கிட்டு சொல்கிறார்

யாழ்ப்பாணம், டிச. 28

இந்திய நல்லெண்ண நேரடி மேற்பார்வையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து ஸ்ரீ லங்கா அரசுடன் பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்பதே தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு

இலங்கை அரசை நம்பி நாம் தனித்துப் பேச முடியாது.

இப்படி புலிகள் யாழ். மாவட்டத் தளபதி திரு. கிட்டு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அரசுக்குழுவுடன் நடாத்திய இரகசியப் பேச்சுக்களின் முடிவில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் திரு கிட்டு மேலும் சொன்னதாவது:

**முதல் தடவை**

இதுவரை ஸ்ரீ லங்கா அரசில் இருந்து யாரும் எம்முடன் நேரடியாகப் பேச வரவில்லை.

அரசக்குழு ஒன்று எம்முடன் பேச வந்தது இதுதான் முதல் தடவை

இன்று நடந்ததை பேச்சு வார்த்தை என்று சொல்லவில்லை.

இதனை ஒரு நல்லெண்ண விஜயமாகத்தான் சொல்ல முடியும்.

இனப்பிரச்சினை குறித்து ஸ்ரீ லங்கா அரசு கூறும் அரை குறைத் தீர்வுகளை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அதே வேளை தமிழீழக் கோரிக்கையில் இருந்து புலிகள் இயக்கம் இம்மியளவும் விட்டுக் கொடுக்காது.

இந்திய நேரடி மேற்பார்

(4-ம் பக்கம் பார்க்க)

முச்சந்தி ஹோனி



சில மாதங்களாகச் சரித்திரங்கள் எழுதப்படுகுது; அதே போல சுதந்திர சரித்திரமும் இந்த மண்ணில் எழுதப்பட்டால் தான் அப்பா விடிவும், வாழ்வும்!

## ★ நிதர்சனம் தொலைக்காட்சி

யாழ்ப்பாணம், டிச. 28

அடுத்த ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகளின் ''நிதர்சனம்'' தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்பொழுது பரீட்சார்த்தமாகவே புலிகளின் தொலைக்காட்சி சேவை நடைபெற்று வருகிறது.

அடுத்த ஆண்டு முதல் ''நிதர்சனம்'' என்ற பெயரில் இப் புதிய சேவை ஆரம்பிக்கப்படும்.

இப்புதிய சேவை யாழ்ப்பாணம், தெல்லிப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# பலாலியிலிருந்து ஹெலி மூலம் ஹாபர் வியூ ஹோட்டல் வந்தனர்

யாழ்ப்பாணம், டிச 28

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து வந்த நல்லெண்ணக் குழுவினர் பலாலி முகாமிலிருந்து ஹெலிமூலம் காங்கேசன்துறைமுக ஹாபர்வியூ ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

குழுவினரை கப்டன் கொத்தலாவல ஹோட்டலிலிருந்து காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை உப அலுவலகத்துக்கு வாகனம் ஒன்றில் அழைத்து வந்தார்.

அங்கே அவர்களை உப அலுவலக ஊழியர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

9-15 மணியளவில் கப்டன் கொத்தலாவல காங்கேசன் துறை சந்திக்கு மோட்டார் சைக்கிளில் சென்று அங்கே நின்ற புலிகளின் தளபதி கிட்டுவையும் அவரது சகாக்களையும் அழைத்து வந்தார்.

திரு. ஜெயபாலசிங்கம், வின்செண் பெரேரா இருவரும் கிட்டுவிற்கு மாலை அணிவித்து வரவேற்றனர்.

சுமார் 9-30 மணியளவில் பேச்சுவார்த்தைகள் மூடிய கதவினுள் ஆரம்பமாகின.

**மக்கள் கூட்டம்**

வெளியே பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆவலுடன் குழுமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தில் மட்டும் 2,500 ஆசிரியர்கள் பற்றுக்குறை

பருத்தித்துறை, டிச.28

இன்று யாழ் மாவட்டத்தில் 2500 ஆசிரியர்களின் இடங்கள் பற்றுக்குறையாகவுள்ளது. குறிப்பாக ஆரம்பக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கே பெரும் பற்றுக்குறை நிலவுகிறது.

ஆகையினால் இந்நிலைமையில் யாழ் மாவட்டக் கல்வியைப் பேணிவரும்- வசதிக்கட்டண அடிப்படையில் நியமிக்கப்படும்- ஆசிரியர்களை அதிபர்கள் நீக்கக்கூடாது —இப்படி கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பருத்தித்துறை கல்வி வட்டார அதிபர்களுக்கான கலந்துரையாடல் பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையில் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறியதாவது::

ஆண்டு 6ஆரம்ப பிரிவிலிருந்து இடைநிலைப் பிரிவுக்கு மாணவர்களை அனுமதிக்கும் திட்டம் எனனுடையதில்லை. சிலர் கல்விப்பணிப்பாளர் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் மாணவர்களுக்கு கஷ்டங்களைச் சுமத்துகிறார் எனப்போராட்டங்களை நடத்துகிறார்கள்.

பருத்தித்துறை கிழக்கில் 12 தனியாசிரியர் பாடசாலைகள் உண்டு இப்பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் உயர் கல்வி கற்க பல மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் பருத்தித்துறை கிழக்கிலுள்ள சகல பாடசாலைகளையும் இடைநிலைப் பாடசாலையாகத் தரமுயர்த்தியுள்ளேன்.

இந்நிகழ்ச்சிகளில்பிரதம கல்வி அதிகாரிகள் திரு. எஸ். கந்தசாமி, திரு. என்.சோமசுந்தரம்,திரு. தியாகராசா ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். இறுதியாக துன்பலை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு சி. சிவஞானசுந்தரம் நன்றி தெரிவித்தார். (உ-118)

## நிர்ப்பந்தத்தின் பேரில்
# வடக்கு, கிழக்கில் பணிபுரிவோருக்கு அலவன்ஸ்

கொழும்பு, டிச 28

வடக்கு, கிழக்கு. மாகாணங்களில் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்ட அரச ஊழியருக்கு விசேட ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படும்.

ஒரு மாத அலுவன்ஸாக ஐந்நூறு ரூபா அல்லது ஊழியரின் அரை மாதச் சம்பளம் எது கூடிய தொகையோ அது வழங்கப்படும்.

வடக்கு, கிழக்கில் சேவையாற்ற என்றே விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்-

இம் மாகாணங்களைச் சேர்ந்த வாக்காளரான அரச ஊழியர்கள்-

இடமாற்றஞ் செய்யப்பட்டும் தொடர்ந்து, வடக்கு இழக்கு மாகாணங்களில் சேவையாற்ற விரும்புபவர்கள்-

ஆகியோர் இந்த விசேட ஊக்குவிப்பு அலவன்ஸைப் பெறத் தகுதியற்றவர்கள்.

பொது நிர்வாகத் துறைச்செயலாளர் திரு. டி. பி ஐ. எஸ் சிரிவர்த்தன இது சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார். (உ-எ

# பொது அறிவுப் போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், டிச 28

1964-ஆம் ஆண்டு நிலையத் தலைவராக இருந்த அமரர் சவிரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை (பிரான்ஸ்) நினைவாக றெக்ளமேஷன் சனசமூக நிலையம் நடத்திய பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளன.

விவரம் வருமாறு:

முதலாம் பரிசு: வி.கலைவாணி, 115, செங்குந்தா -இந்துக்கல்லூரி வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு: இந்துமதி மகேந்திரமூர்த்தி கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மூன்றாம் பரிசு: பி. ஜெனிமரிஞ, 20, தண்ணீர் தாங்கி வீதி, குருநகர்,யாழ்ப்பாணம்.

ஆறுதல்பரிசுகள் ஐந்து!

1. பி. மேவின் யோசப் 42, ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

2. யோ. மேரிமரிஞ, அன்பு இல்லம் ஊறணி, காங்கேசன்துறை.

3. வே. குமாரசாமி, அதிபர், வல்வை அ.மி.த.க பாடசாலை, வல்வெட்டித்துறை

4. இ றெஜிநோல்ட், 3, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.

5 வைத்தியநாதர் சிவனேசன்,தேவாலயம் ஒழுங்கை, தாவடி, கொக்குவில்.

பரிசு பெற்றவர்கள் சனசமூக நிலையத்துக்கு வந்து அடையாளங் காட்டி பரிசுகளைப் பெற்றுச் செல்லும் படி நிலைய நிர்வாகிகள் கேட்டுக் கொள்கிறார்கள். (உ-எ)

## கட்டாக்காலிகள் தொல்லை

வேலணை, டிச. 28

வேலணை அரசினர் வைத்தியசாலை வளவினுள் கட்டாக்காலி ஆடு, மாடு, நாய்களின் தொல்லை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றன.

இக் கட்டாக்காலிகளினால் வைத்தியசாலையின் வளவு அசுத்தம் அடைவதோடு நோயாளிகளும் அசௌகரியம் அடைகின்றார்கள். (உ-16)


# விளையாட்டரங்கு


# காரை. அணி வெற்றி

காரை விளையாட்டுக் கழக 'பி'பிரிவு அணிக்கும் கோவளம் இளைஞர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே கோவளம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற 20 ஓவர்களைக் கொண்ட மென்பந்துகிறிக்கெட் போட்டியில் காரை 'பி'பிரிவு அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காரை 'பி'பிரிவு அணி ஒன்பது விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பாக ஆடிய கிருபா, இராசேந்திரன், செந்தில்வேலவர், கருணாகரன் முறையே 15, 14, 11, 09 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து ஆடிய கோவளம் அணியினர் பதினைந்து ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் காரை விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த திருச்செல்வம் சிறப்பாக பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், சிவானந்தா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (இ)


## Investment Opportunity

An established and successful Engineering concern in Jaffna requires additional capital to implement its future plans. Those who are interested in joining the Company as share-holders are kindly requested to contact us for further information:

BUSINESS PROMOTERS LTD.
First floor, 198(76), Kasturiar Road,
JAFFNA.



சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**தேவை**

அனுபவமுள்ள அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர எண்: 41
மே/பா உதயன்
த. பெ. எண் – 23
யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## ஆலோசனை

லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியினது எதிர்காலத்தை ஒரு உறுதியான அஸ்திவாரத்தில் அமைப்பது சம்பந்தமான தங்கள் ஆலோசனைகளை எதிர்வரும் 02-01-1987 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தெரிவிக்குமாறு மேற்படி கல்லூரியின் நலனில் அக்கறையுள்ள சகலரையும் அழைக்கின்றேன்.

-பதிவாளர்

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## பாடசாலைக் கட்டடம் வீழ்ந்தது

யாழ்ப்பாணம், டிச. 28

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் பாடசாலையின் தற்காலிக கட்டடம் முற்றாக விழுந்து விட்டது.

பல தடவைகள் இதனை நிரந்தர கட்டடமாக்க பாடசாலை அபிவிருத்திச் சபை விடுத்த வேண்டுகோள் கல்வித் திணைக்களத்தினால் கவனிக்கப்படவில்லை என பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. எஸ். நவரத்தினம் கவலை தெரிவித்தார். (உ)

# நிகழ்கால ஓவியங்கள் சரித்திரத்தின் சான்றுகளாகும்
## பயிற்சி வகுப்பு ஆரம்பத்தில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், டிச. 28

சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் ஓவியங்கள் வருங்கால சரித்திரத்தின் சான்றுகளாக அமையும் என யாழ். மாவட்ட கலாசார பேரவைத் தலைவரும் யாழ். அரச அதிபருமான திரு. வை. மு. பஞ்சலிங்கம் கூறினார்.

யாழ். மாவட்ட கலாசார பேரவையின் ஓவியக் குழு நடத்தும் ஓவியப் பயிற்சி வகுப்புக்களை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அரச அதிபர் இவ்வாறு கூறினர்.

யாழ். இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள ஓவியக் கலா நிலையத்தில் இந்த அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது

அரச அதிபர் தொடர்ந்து பேசுகையில்-

யாழ் கலாசார பேரவை 11 துறைகளில் பணியாற்றவுள்ளது. அதில் ஒரு துறைதான் இவ் ஓவியத்துறை.

இங்கே ஓவியம் பயிலும் மாணவர்கள் தாம் கற்ற வித்தையை எதிர்கால சந்ததிக்கும் எடுத்துச் செல்லவேண்டும். -என்றார்.

கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் உரையாற்றுகையில்-

ஓவியர்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஓவியத்தை பயிற்றுவிக்க முன் வரவேண்டும்.

எமது கலை, கலாசார பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் ஓவியங்கள் தீட்டப்பட வேண்டும் – என்றார்.

திரு. எம். சிவராசா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். சமய அறிஞர்கள் ஆசியுரைகள் வழங்கினார்கள். (உ-5)

## நிதி ஒதுக்கக் கோரிக்கை

மண்டைதீவு, டிச. 28

மண்டைதீவு தெற்குக் கடற்கரையில் மயான மடம் ஒன்று கட்டுவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கித் தருமாறு மண்டைதீவு பிரஜைகள் குழு யாழ் அரச அதிபரைக் கோரியுள்ளது. (உ-88)

# பனம் தோப்புக்கள் பதிவு செய்யப்படுகின்றன

வேலணை. டிசம்பர்.28


பனம் தோப்புக்களையும் அத்தகைய தோப்புக்களின் சொந்தக்காரர்களையும் பதிவு செய்வதற்கான அங்கத்தவர் உறுப்புரிமை சம்பந்தமான படிவங்களை பனை அபிவிருத்திச்சபை விநியோகித்து வருகிறது.

இந்த அமைப்பில் 25 பனைகளுக்கு மேல் வைத்திருக்கும் சொந்தக்காரர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இந்த அமைப்பில் சேர்ந்து பதிவு செய்ய விரும்புபவர்கள் அவ்வப் பகுதி விசேட சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளலாம். (உ-167)


மக்கள் முகம்


## உயர் நீதிமன்ற வழக்கறிஞர்



பத்திரிகை எழுத்தாளரும் சட்ட விரிவுரையாளருமான திரு. பொன். பூலோகசிங்கம் அண்மையில் இலங்கை உயர்நீதிமன்ற வழக்கறிஞராக பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்களான அத்துக்கோறள, சில்வா ஆகியோர் முன்னிலையில் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் அபிவிருத்திக் கல்விமாணி சட்டமாணி (எல்.எல் பி) ஆகிய இரு பட்டங்களையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டத்தரணிகளுக்கான கற்கை நெறியில் சித்தியும் பெற்றுக் கொண்ட இவர்- இலங்கைப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பல கட்டுரைகளையும் பல்வேறு கலைவடிவங்களையும் தீட்டியுள்ளார்.

அத்தோடு பல நூல்களும் இவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அங்கு கல்வி கற்றபோது கல்லூரியின் சிறந்த மாணவனுக்கான இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் பாலசிங்கம் ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைப் பிரதிநிதியாகவும் இவ்வியக்கத்தின் இலங்கைக் கிளைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். (இ)

# தைப்பொங்கலன்று வடக்கில் பனைவிழா

கரவெட்டி, டிச.28

பனம்பொருள் உற்பத்தியாளர்கள் எதிர் வரும் தைப்பொங்கல் தினத்தன்று பனைவிழா அனுஷ்டிப்பார்கள்.

வடபகுதி தெங்கு பனம் பொருள் அபிவிருத்திச்சங்க சமாசத்தின் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி சமாசத்தின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வடபகுதியில் தைப் பொங்கல் தினத்தை பனம்பொருள் உற்பத்தி நாளாக கொள்ள வேண்டும்.

தைப்பொங்கல் திருநாளை எப்படிக் கொண்டாடுகிறார்களோ அதே போன்று பனம், தெங்குப் பொருள் நாளாகவும் அதனைக் கொண்டாட வேண்டும்— இப்படி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (உ-70)

# தாக்குதல் இல்லையேல் தேடுதலும் இல்லை!
## கூட்டுப்படைத்தளபதி கூறுகிறார்

கொழும்பு, டிச 28

தாக்குதல் இல்லையேல் தேடுதல் நிற்கும்.

தமிழ்ப் பகுதிகளின் நிலைமை குறித்து கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க முன்கண்டவாறு சொன்னார்.

நத்தார் தினத்தன்று போர் நிறுத்த [illegible] குறித்து வடக்கு, கிழக்கு ஆயுதப்படை முகாம்களுக்கு ஜெனரல் சிறில் ரணதுங்க விஜயம் செய்தார்.

கொழும்பு திரும்பிய பின்னர் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

போர் நிறுத்தம் பூரணமாகக் கடைப்பிடிக்கப் [illegible] என்றும் அவர் சொன்னார். (உ-ஐ-ஏ)

# அதிபர் பதவி நிலையில் புதிய மாற்றங்கள்

பலாலி, டிச. 28

பாடசாலைகளில் இதுவரை காலமும் அதிபர்களாக இருந்தவர்களதும் விசேட பதவியணியில் இருந்தவர்களதும் பதவி நிலையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இப்புதிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி இதுவரை காலமும் முதலாம் தர விசேட பதவியணியில் இருந்தவர்கள் மூன்றும் வகுப்பு கல்விச் சேவைக்குள்ளும்—

பழைய [illegible] தர [illegible] இரண்டாம் தர விசேட பதவியணியினரும் புதிய முதலாம் தர அதிபர் சேவையின் கீழும்—

பழைய நான்காம் தர அதிபர்களும் மூன்றும் தர விசேட பதவியணியினரும் புதிய இரண்டாம் தர அதிபர் சேவைக்குள்ளும்—

பழைய 5ஆம்தர அதிபர்கள் புதிய மூன்றும் தர அதிபர் சேவைக்குள்ளும் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குரிய புதிய நியமனத்தினையும், சம்பளதிட்டத்தினையும் ஜனவரியில் இருந்து நடைமுறைப் படுத்தும்படி கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பணித்துள்ளார். (உ-119)


## Uduvil Girls' College

(FURTHER EDUCATION PROGRAMME)
DATA PROCESSING AND
COMPUTER PROGRAMMING
IN BASIC LANGUAGE
MODULES TO BE COVERED:

(i) INTRODUCTIN TO COMPUTING
(ii) GATES THEORY
(iii) ALGORITHMS
(iv) BASIC Language, ASSEMBLER
(v) COBOL Language
(vi) WORD PROCESSING
(vii) SYSTEM / PROJECT

APTITUDE TEST ON 7th Jan. 87.
REGISTER BEFORE 5th Jan. 87.

Miss. R. J. MANN
Director



புதுவருட விசேஷ வாய்ப்பு
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

## மாபெரும் மலிவு விற்பனை

டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை

* ஆண்கள் * பெண்கள்
* சிறுவர்களுக்கு

உசந்த சிறந்த தணிவகைகளுக்கும் தைக்கப்பட்ட உடைகளுக்கும் மற்றும் லீடன் தயாரிப்புகளுக்கும் உடன் நாடுங்கள்


## லீடன் காமென்ஸ்

235, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச் சந்தி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23603



# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



### செல்வன் துரைசிங்கம் தெய்வேந்திரன் (பெடி)

(உள்நாட்டு, வெளிநாட்டு மதுபான விற்பனவுக்கடை உரிமையாளர், பருத்தித்துறை.)

அன்னையின் மடியில்: 18 - 03 - 1954 ஆண்டவன் அடியில்: 29 - 11 - 1986

எங்கள் குடும்பத்தின் விடிவெள்ளியே! நீ ஊருக்கெல்லாம் உத்தமனாய், வீரத்தின் உறைவிடமாய், நட்புக்கு இலக்கணமாய், பாசத்தின் மறுவடிவாய், பண்பின் இருப்பிடமாய் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த எங்கள் வேங்கையின் மைந்தன்.

எங்கள் அன்பு மகனே! நீ மின்சாரம் தாக்கியதால் கணப்பொழுதில் எம்மை விட்டகன்றாய். ஆனால் உன் நினைவோ எங்கள் நெஞ்சை என்றென்றும் விட்டு அகலாதய்யா! கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து அன்புக் கரம் நீட்டிடும் அந்த அன்பு முகம் எங்கே? எங்களை நேசமுடன் காத்திடும் அந்தப் பாசமுகம் எங்கே? உன் மணவாழ்வு காணக் காத்திருந்த வேளையிலே, மறுவாழ்வு தேடிப் போனாயோ? எங்கள் காவல் தெய்வத்தின் 31ம் நாள் திதியில் (நாளை திங்கட்கிழமை 29. 12. 86ல்) கலந்து கொண்டு அவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அவரது உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கும்,

அவரின் பிரிவால் வாடும்,
ஐயா, அம்மா, அக்கா, தம்பியர், தங்கையர், மைத்துனன்மார், மருமக்கள், சித்தப்பாமார்.

**நீ புரியாதவர்க்கு அதிசயப் பிறவி!
உன்னைப் புரிந்தவர்க்கு
தெய்வப் பிறவி!**

திரு. திருமதி. வ. துரைசிங்கம்
மந்திகை,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கடவுளைத் தியானி! உன்னுள்ளே கடவுள் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்.

—சுவாமி விவேகானந்தர்.

உதயன்

இல,15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 28-12-1986 த.பெ இல 23

## விலை உயரும் விறகு!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விறகு விலை வானத்தை முட்டும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அரசாங்க மரக்காலைகளிலேயே மாத நடுப்பகுதியில் இருந்து ஒரு தாக்கு விறகுக்கு அதாவது 112 கிலோ எடை விறகுக்கு 61ரூபா 50 சதம் அள்ளிக் கொடுக்க வேண்டி உள்ளது!

தனியார் மரக்காலைகளில் இடத்துக்கு இடம் விறகு விலை உச்சத்தை எட்டிப் பிடிக்கப் போட்டி போடுகிறது.

விலை உயர்வு வந்தால் தட்டுப்பாடும் தானாகவே வந்து சேரும். குறிப்பாக மழை காலத்தில் விறகுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கம். இந்த வேளையில் அரசாங்க மரக்காலைகளில் விறகின் விலையை உயர்த்தி இருக்கிறார்கள்.

தனியார்துறையினர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எப்படிக் 'கொள்ளை' அடிப்பார்கள் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வர்த்தகர்களில் பலருக்கு அது கைவந்த கலை அல்லவா?

சொந்த மக்கள் மத்தியிலேயே தாம் வியாபாரம் செய்கிறார்கள் என்பதை இப்படியான சந்தர்ப்பங்களில் மட்டுமல்ல சாதாரண காலங்களில்கூட அவர்கள் மறந்துவிடுவார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் ''தவித்த முயல் அடிக்கும்'' சூரர்கள் அன்றோ!

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ் குடாநாட்டுக்குப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்ப்பதில் ஆகும் போக்குவரத்துச் செலவு மாதாந்தம் என்றில்லாமல் நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

ஆயுதப்படை முகாம்களைத் தாண்டி வருவதற்கு வழங்கப்படும் 'சந்தோஷங்கள்' கலவர நிலைகளுக்கு ஈடுகொடுத்துப் பொருள்களைக் கொண்டுவருவதற்கான மேலதிக ஆபத்துக் கட்டணங்கள். இவ்வாறான பல கொடுப்பனவுகளை ஈடுசெய்வதற்காகவும் போக்குவரத்துக் கட்டணங்களைத் தாம் உயர்த்த வேண்டி இருப்பதாக வாகனச் சொந்தக்காரர்கள் கட்டண உயர்வை நியாயப்படுத்த முயல்கிறார்கள்.

எது எப்படியோ எல்லா உயர்வுகளும் மக்கள் தலைக்கு மேல் தான் சுமத்தப்படுகின்றன. அவர்களைத் தான் கட்டண உயர்வுகள், விலை உயர்வுகள் யாவும் தலை எடுக்க முடியாதவாறு அமுக்கி, நெருக்கிப் பிழிகின்றன. சிறு பகுதியையாவது வாகனச் சொந்தக்காரர்களோ அல்லது வர்த்தகர்களோ தாங்கிக் கொள்கிறார்களோ என்றால் இல்லை. இல்லவே இல்லை என்று அடித்துக் கூறலாம்!

இந்த நிலையில் குடாநாட்டில் அரசாங்கம் கொண்டுவந்த விறகு விலை உயர்வு முழுக்க முழுக்க சாதாரண மக்கள் தலையிலேயே சுமத்தப்பட்டிருக்கிறது.

நகரப் பகுதிகளில் மின்சாரத்துக்குப் பதில் குறைந்த செலவில் சமையலுக்கு உதவி வந்த காஸும் இப்போது இல்லை. ஆகையால் விறகுத் தட்டுப்பாடும், விலை உயர்வும் நகரம், கிராமம் என்ற பேதம் இல்லாமல் எல்லா இடங்களில் வாழும் மக்களையும் பாதித்து உள்ளது.

விறகு மக்களின் மிக முக்கிய அத்தியாவசிய பாவனைப் பொருள்களில் ஒன்று. உணவுப் பொருள் கையில் இருப்பவரும் விறகு இல்லையேல் பட்டினி கிடக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும்.

இதனை உணராது அரசாங்கம் அடிக்கடி விறகுத் தட்டுப்பாட்டையும், விலை உயர்வையும் உண்டாக்கி விடுவதேன்? உணவுப்பொருள் விநியோகத்தை நிறுத்தினால் வெளிப்படையாகத் தெரிந்துவிடும் என்பதால் விறகு கிடைக்காமற் செய்வதன் மூலம் மறைமுகமாகக் குடாநாட்டு மக்களைப் பட்டினிபோடும் எண்ணத்திலா?

இந்தப் பிரச்சினையிலிருந்து, கஷ்டத்திலிருந்து நிரந்தரமாக மீள்வதற்கான வழிமுறைகளைக் காலந்தாழ்த்தாது கண்டறிய வேண்டும்.

விறகு வர்த்தகத்தில் அரசாங்கத்தையும் தனியாரையும் மட்டும் 'அனுபவிக்க' விடாமல் ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபட்டால் நல்லது. மக்களுக்கு நியாய விலையில் விறகு கிடைக்க அவை ஏற்பாடு செய்ய முடியும்.

விறகுத் தேவையை ஓரளவேனும் ஈடு செய்யவல்ல மரங்களை வளவுகளில் வளர்க்க வேண்டும். பனை, தென்னை, வேம்பு, இப்பில் இப்பிலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். குறைந்த விறகுடன் சமையல் செய்யக் கூடிய அடுப்புகளைக் கண்டுபிடிக்க வேண்டும். தாராளமாகக் கிடைக்கும் உமி போன்ற மூலப்பொருள்களை எரிபொருள்களாகப் பாவிக்கக்கூடிய சாதனங்களைக் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும்.

அதேவேளை மாற்று எரிசக்திகளையும் இனங்கண்டு கொள்ளுதல் அவசியம்.

உயிர்வாயு, சூரியசக்தி ஆகிய மாற்று எரிசக்திகளைப் பரந்த அளவில் பயன்படுத்தும் விதத்தில் விரிவான திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும்.

இவற்றை யார் செய்வது? அரசை நம்பி இருப்பதா? இல்லை எமக்குள்ள நிதிவளத்தை, மனித சக்தியை, ஆற்றலைப் பயன்படுத்தி நாமே செய்ய வேண்டும்.

## விடைத்தாள் திருத்தும் வேலைகள் ஆரம்பம்

கொழும்பு, டிச 28

நாடு முழுவதும் நடைபெற்று முடிந்த ஜீ.சி.ஈ சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் வேலைகள் வெள்ளியன்று ஆரம்பமாகின.

66 நிலையங்களில் இத் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மட்டக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

**உதயன் ஞாயிறு விவரண சிறப்பம்சம்**

# உண்டியலில் சேர்க்கப்படும் பணம்; உலகளாவிய ரீதியில் உதவுகிறது

## முல்லைத்தீவில் 'றெட்பாணு' செய்யும் முன்னேற்றப் பணிகள் குறித்து ஒரு பேட்டி

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு நோர்வே நாட்டு 'றெட்பார்ணு' இயக்கம் பெருமளவு உதவி புரிந்து வருகின்றது.

'றெட்பார்ணுவின்' வதிவிடப் பிரதிநிதியாக கொழும்பில் திரு. சுவேரே குறேன் கடமையாற்றுகிறார்.

முல்லைத்தீவு மாவட்டத் திட்ட முகாமையாளராக திரு. ஏ. ஜி. எம். பாலச்சந்திரன் பணிபுரிகிறார். 'றெட்பார்ணு' முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற் கொண்டுள்ள அபிவிருத்தி வேலைகள் பற்றி திரு. பாலச்சந்திரன் கூறிய விவரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

பேட்டி கண்டவர்: உதயன் முள்ளியவளை செய்தியாளர்: ஆ. சபாரத்தினம்

கேள்வி: 'றெட் பாணு' என்ற சொல்லின் கருத்து என்ன? இந்தத் திட்டம் எப்படி முல்லை மாவட்டத்தில் இயங்குகிறது?

பதில்; குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நோர்வேயில் ஆரம்பிக்கப்பட்டு உலகின் பல பாகங்களிலும் இது இயங்கி வருகிறது. ஸ்ரீலங்காவில் 9 மாவட்டங்களில் இது இயங்குகிறது

நோர்வேயில் உண்டியல் மூலம் சேகரிக்கப்பட்ட பணமே உலகத்திலுள்ள எல்லாக் கிளைகளுக்கும் அனுப்பப்படுகிறது. பின்தங்கிய பிரதேசங்களை முன்னேற்றுவதே இதன் நோக்கமாகும்.

கேள்வி: முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்தெந்தக் கிராமங்களில் நீங்கள் முன்னேற்றங்களைச் செய்துள்ளீர்கள்? என்ன அடிப்படையில் இயங்குகிறீர்கள்?

பதில்: சமூக அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் பொருளாதார அபிவிருத்தி ஆகிய அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் 3 வருடம் தொடக்கம் 5 வருடங்களுக்கிடையில் புளியங்குளம், தச்சடம்பன், மணவாளன்பட்டமுறிப்பு, கரிப்பட்டமுறிப்பு, கற்கிடங்கு, புதுக்குடியிருப்பு 8 ஆம், 9 ஆம் 2ஆம் வட்டாரங்கள், வள்ளிபுனக் கிராமம், கேரவில் கிராமம், வசந்தபுரம், பேராறு, கற்சிலைமடு, வேணாவில் ஆகிய கிராமங்களின் மக்களின் பங்களிப்போடு திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். அது எமக்குப் பூரண வெற்றியையும் தந்துள்ளது.

**பால் உற்பத்தி**

கேள்வி: நீங்கள் ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்களில் இதுவரை எந்தக் கிராமத்தில் அதிக பலனைப் பெற்றுள்ளீர்கள்?

பதில்: சில காலத்துக்கு முன் நாம் தச்சடம்பன் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பால் அபிவிருத்தித் திட்டம் பூரண வெற்றியைத் தந்துள்ளது. பசு மாடுகளையும் எருதுகளையும் நாம் மக்களிடம் கொடுத்தோம். அவர்களின் பங்களிப்போடு பால் அபிவிருத்தித் திட்டம் செயற்பட்டது. கடந்த வருடம் 65 ஆயிரம் ரூபாவை நிகர லாபமாகவும் அம் மக்கள் பெற்றனர். அத்துடன் 'தச்சடம்பன் பால் சங்கம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு இப்பொழுதும் இயங்கிக் கொண்டு வருகிறது.

பாலில் இருந்து வெண்ணெய் எடுப்பதற்குரிய இயந்திரத்தையும் தற்பொழுது அரசாங்கம் அவர்களுக்கு வழங்கியுள்ளது

**மீன்பிடி**

கேள்வி: நன்னீரில் மீன் வளர்க்கும் திட்டத்தையும் நீங்கள் ஆரம்பித்துள்ளீர்களா?

பதில்: ஆம், தச்சடம்பன் என்ற கிராமத்திலேயே அங்குள்ள குளத்தில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம் மீன் குஞ்சுகளை தம்புள்ளவில் இருந்து கொண்டு வந்து அக்குளத்தில் விட்டு மீன் வளர்ப்புத் திட்டத்தைத் தொடக்கி உள்ளோம்.

அக்குஞ்சுகள் பெரிய மீன்களாக வந்த பின்பு முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கக்கூடிய சுவாத்திய வசதியிருந்தாலும் சிங்களக் கிராமங்களில் எடுக்கக்கூடிய கித்துள் இலைகள் போன்ற பெரிய இலைகளை இங்கும் பெற முடியாமல் இருப்பதால் மீன் பெருக்கத்தை விருத்தி செய்யமுடியாமல் இருக்கிறது.

மீன் குஞ்சுகளை வெளி இடங்களிலிருந்தே கொண்டு வர வேண்டும்.

ஒரு குளத்தில் ஆறு மாதத்துக்கு மட்டும் நீர் இருந்தால் போதும் அப்படியான குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பிக்கலாம்.

உதாரணமாக இரணைமடு, முத்தையன்கட்டு, வவனிக்குளம் ஆகிய குளங்களிலும் இத்திட்டத்தை ஆரம்பிக்கலாம்.

தச்சடம்பன் குளத்தில் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தால் 8 ஆயிரம் ரூபாவை அம்மக்கள் பெற்றுள்ளார்கள்.

**நூல்நிலையம்**

கேள்வி: பொதுமக்களுக்குப் பயன்படும் வேறு என்ன சேவைகளில் ஈடுபட்டுள்ளீர்கள்?

பதில்: கரிப்பட்ட முறிப்பு என்ற கிராமத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட நூல் நிலையத்தை ஆரம்பித்துள்ளோம். அங்கு ஓய்வு நேரங்களில் மக்கள் போய் நூல்களை வாசித்து அறிவைப் பெறுகிறார்கள்.

**விவசாயம்**

கேள்வி: விவசாயம் சம்பந்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் றெட்பாணுவின் பங்கு என்ன?

பதில்: 8, 12, 15 பேர் கொண்ட குழுக்களாக மக்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் தனிக் கிணறுகளைத் தோண்டி விவசாயம் செய்ய நாங்கள் கிணறு ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபா விதம் கொடுத்துள்ளோம்.

உதாரணமாக தச்சடம்பன் என்ற கிராமத்தில் 12 தனிக்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. வள்ளிபுனம் என்ற கிராமத்தில் 12 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 3 பொதுக் கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன.

விவசாயத்தில் இருந்து பெறப்பட்ட இலாபத்தைக் கொண்டு பின் அவர்களாக 5 பேர் கொண்ட குழுக்களை அமைத்து மேலும் பல கிராமங்களுக்கு இந்தத் திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

**அகதிகள்**

கேள்வி: முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பல அகதிகள் வந்துள்ளார்களே அவர்களுக்கு 'றெட்பாணு' செய்யும் உதவிகள் என்ன?

பதில்: அகதிகளை இரு பிரிவாகப் பிரித்துள்ளோம். நாயாறுக்குத் தெற்கேயுள்ள கிராமங்களில் இருந்து வந்துள்ளவர்கள் ஒரு பிரிவு, திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் இன்னொரு பிரிவு.

கேள்வி: அகதிகளுக்கென்று 'றெட்பாணு' விசேட சுகாதார வசதிகள் செய்து கொடுத்துள்ளதா?

பதில்: முல்லைத்தீவுப் பிரசைகள் குழு ஒய்வு பெற்ற சுகாதார வைத்தியர் ஒருவரைத் தருவதாகச் சம்மதம் தெரிவித்துள்ளது. 21 தொண்டர்களைக் கொண்ட 7 மத்திய நிலையங்களை அளம்பில், குமுளமுனை, கள்ளப்பாடு, சிலாவத்தை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, முள்ளியவளை. செல்வபுரம் ஆகிய இடங்களில்அமைத்துள்ளோம். மருந்துவகைகளை நாமே கொடுக்கின்றோம்.

அகதிகளான தாய்மார் வேலைக்குச் செல்லும் பொழுது அவர்களின் குழந்தைகளை வைத்து பராமரிப்பதற்கு 6 இடங்களில் குழந்தை பராமரிப்பு நிலையங்கள் அமைத்துள்ளோம்.

அக்குழந்தைகளுக்கு நாமே உணவும் கொடுக்கிறோம். இதற்காக உதவியாட்களையும் நியமித்துள்ளோம்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 2 பைக்கட் லக்ஸ்பிறே மாதத்துக்கொருமுறை கொடுப்பதோடு பிரசவகாலத்தில் 100 ரூபாசெலவுக்கெனப் பணமும் கொடுக்கிறோம்.

கே; அகதிகளின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் 'றெட்பாணு'வின் பங்கென்ன?

ப: 1—5 தர மாணவருக்கு ஒன்றரை மீற்றரும் 6—8 தர மாணவருக்கு இரண்டேகால் மீற்றரும் 9—12 தர மாணவருக்கு இரண்டரை மீற்றரும் அளவுள்ள துணியை புதுக்குடியிருப்பு, செல்வபுரம்,

(4-ம் பக்கம் பார்க்க)

**பிலிப்பீன்ஸில்**

# மக்கள் போராட்டம் தொடர்ந்து நடக்கும்

## துப்பாக்கிகளை உயர்த்தி கம்யூனிஸ்ட்டுகள் பிரதிக்ஞை

மணிலா, டிச.27

மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த பிரதிக்ஞை பூணுவோம். ஜனாதிபதி அக்கியூனோவின் நிர்வாகம் அரசியல் உரிமைகளைப் புறக்கணிப்பதைத் தடுத்து நிறுத்துவோம்.

பிலிப்பீன்ஸில் தடை செய்யப்பட்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் 18 ஆவது ஆண்டு நிறைவு நேற்றுக் கொண்டாடப்பட்டபோது இந்தமுடிவு எடுக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் தமது கட்சிக் கொடியை ஏற்றி வைத்தும் துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்தும் மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து பிரதிக்ஞை எடுத்தனர்.

திருமதி அக்கியூனோவின் புதிய தேசிய அரசியல் யாப்பு மக்களுக்கு எதிரானது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

17 இளம் புரட்சிவாதிகளால் 1968ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியில் தற்போது நாற்பதாயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். (ஒ)

**ஈரானிய ஒற்றர்**

சவூதி அரேபியாவில் கடந்தவாரம் விபத்துக்குள்ளாகிய ஈராக்கிய விமானத்தை லெபனிய கடவுச் சீட்டு வைத்திருந்த ஈரானிய ஒற்றர்களே கடத்திச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

**செய்திச் சாரம்**

**எலிகளால் பாதிப்பு**

பங்களாதேஷில் எலிகளின் தொல்லை இல்லாதுவிடின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண முடியுமாம். (ஒ)

**தீ விபத்து**

பிலிப்பீன்ஸில்இரண்டு அரசாங்கக் கட்டிடங்களில் தீ விபத்து ஏற்பட்டதினால் பல லட்சம் பெறுமதியான உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. (ஒ)

**நடவடிக்கைதீவிரம்**

ஷங்காயில் சீனமாணவர்கள் ஒரு வாரமாக மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து கூட்டங்கள் நடத்துவதற்கான விதிகளை அரசாங்கம் மேலும் தீவிரப் படுத்தியுள்ளது. (ஒ)

**இரண்டாவது சந்திப்பு**

பாகிஸ்தான் இந்தியா நாடுகளிடையே ஒரு வார காலத்தில் நடக்கும் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் இஸ்லாமாபாத்தில் நடைபெறுகின்றன. (ஒ)

**படகு வீடுகள் தீக்கிரை**

கொங்கொங்கில் படகு வீடுகளில் ஏற்பட்ட தீவிபத்தால் சுமார் 2 ஆயிரம் படகுவீடுகள் தீக்கிரையாகின. (ஒ)

**வெளி உலகில்**

## மாணவர் கிளர்ச்சிக்கு சீனாவில் தடையுத்தரவு

பீகிங், டிச.26

சீனாவில் மாணவர் கிளர்ச்சிக்கு தடை விதிக்கப்பட்டது.

சீன அரசு அதிகாரிகள், ஒலி, ஒளிபரப்பு நிலையங்கள் மூலம் சீன மக்களுக்கு தடை உத்தரவை அறிவித்தனர்,

கூடுதல் ஜனநாயக உரிமைகள் கேட்டு பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த சில வாரங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இனிமேல் பொது இடங்களில் கூடுவதும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்துவதும் தடை செய்யப்படும்.

ஊர்வலங்கள் நடத்த 5 தினங்களுக்கு முன்னதாக அரசு அனுமதி பெறப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)



**பொய்யாமொழி**

குறள்:

இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து

பொருள்:

[illegible] ஒரு பற்றும் இல்லாதிருத்தல் இயல்பாகும்
[illegible] உடையராக இருத்தல் மீண்டும்
மயங்குவதற்கு வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி பிறந்த போது...

- வல்வை ந. அனந்தராஜ் -

பாலன் ஏசு அவதரித் தார்
பாவ பூமியில் பாவங்கள் அகல
ஞாலம் மகிழ வலம் வந்தார் — இந்த
நானிலம் அவரால் மகிழ்ந் ததுவே.

இறை தூதரின் புனித வரவு
எங்கும் வெள்ளை ஒளிக் கீற்று
மறை வேதம் உணர்த்து மந்த
மகாத் மாவின் வேத வாக்கு.

மலையில், மக்கள், மனங் களில்
பாவிகள் நெஞ்சில் பாரினி லெங்குமே
சிலுவையைப் புனிதர் சுமந்த வேளையில்
பாவங்கள் அகன்றது பாவிகள் திருந்தினர்

இன்னு மொரு முறை எங்களேசு
எங்கள் ஊரில் எங்கள் நாட்டில்
பாவங்கள் அகல பாவிகள் திருந்த
பிறந்து வந்து சுமக்க மாட்டாரா?

## பவுலின் ஜெப ஜீவியம்

'நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்' (1கொரி11:1)

கிறிஸ்துவின் ஜெப ஜீவியம் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறது போலவே, அப் பவுலின் ஜெபஜீவியமும் நமக்கு சவாலாக இருக்கிறது! ஆகவே அவர் தன் ஜீவியத்தைக் குறித்து மார் தட்டி, 'நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்' என்று கூறக் கூடியவராய் இருந்தார்.

அப்.பவுலின் ஜெப ஜீவியத்தை அவரே கூறுகிறார்! வாசித்துப் பாருங்கள். 'நான் ஜெபம் பண்ணும் போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறதைக் குறித்து... தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார். (ரோமர்

**ஞானக்கதிர்**

1:9) இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும், நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. (ரோமர் 10:1)

இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து... ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியைத் தந்தருள வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்' (எபே 1;16-19)

அவர் ஜெபித்தது மட்டுமல்லாமல் நம்மையும் ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்துகிறார். 'நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்



னோடுகூடப் போராட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்' (ரோமர் 16:32)

'அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும் பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்குதவி செய்யுங்கள்' (11 கொரி 1:11)

'இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்; ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்' (கொலோ 4:2).

'எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்; எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்' (1 தெச 5:16)

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
Weekends — 6 months
Fees Rs. 1500/-
Commencement 24-01-1987
Cantabia Institute
(PIONEERS IN COMPUTER EDUCATION)
21, Main Street, Jaffna.
T'Phone: 24201



# உதயன்

28 : 12 : 1986 ஞாயிற்றுக்கிழமை



RADIO, T. V. & ELECTRONIC
ENGINEERING COURSE
Weekends — 7 months
G. C. E. (O/L) பரீட்சை
எழுதியவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
Fees ரூ. 250/- வீதம்
6 மாதங்களுக்கு
ஆரம்பம்: 27-12-86 10 மணி
Cantabia Institute
Te: 21, Main Street, Jaffna.
P'hon 24201


## கிழக்கில் இருந்தும் நல்லெண்ணக் குழு

மட்டக்களப்பு, டிச.28 யாழ்குடா நாட்டில் உள்ள தமிழ்ப் போராளித் தலைவர்களைச் சந்திக்க கிழக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம் பிரமுகர்களின் நல்லெண்ணக்குழு ஒன்று விஜயம் செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் கிழக்கு மாகாணத்தில் சகஜநிலைமையைக் கொண்டு வருவதற்கு உதவும்படி கோரவே இக்குழு யாழ் விஜயம் செய்'' விருக்கின்றது.

1985 ஏப்ரல் முஸ்லிம் தமிழர் கலவரத்தின்பின்னர் முஸ்லிம்கள் நடமாட முடியாத நிலைமை கிழக்கில் நிலவுகின்றதாம்.

இதனால் முஸ்லிம்மக்கள் வர்த்தக மற்றும் தொழில் துறைகளில் நிம்மதியாக ஈடுபடமுடியாத நிலைமை நிலவுகிறதாம்.

யாழ் விஜயத்துக்கான ஏற்பாடுகளை காத்தான்குடி பட்டண சபையின் முன்னாள் தலைவர் அல் ஹாஜ் அகமதுலெப்பை மேற்கொள்வதாகத் தெரிகிறது.

ஜனவரி 3 ஆம் 4 ஆம் திகதிகளில் கொழும்பில் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூதைச் சந்தித்த பின்னரே யாழ் விஜயத்துக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்று தெரிகிறது. (இ-எ-21)



அரச தூதுக்குழுவின் தலைவர் திரு. வின்சன்ட் பெரேரா புலிகள் குழுவின் தலைவர் தளபதி கிட்டுவை பேச்சு முடிந்து விடை பெறும் போது ஆரத்தழுவும் காட்சி.

## மக்கள் பார்த்து நிற்க சிப்பாய் - புலிகள் பவனி!

யாழ்ப்பாணம், டிச. 28 சிப்பாய்களின் ரோந்துப் பவனியின்பின் விடுதலைப்புலிகள் நடை பவனி மேற்கொண்டனர்.

நேற்று கொழும்பில் இருந்துவந்த நல்லெண்ணத் தூதுக்குழுவினரை சந்திக்க தளபதி கிட்டு சகிதம் புலிகள் காங்கேசன்துறைச் சந்தியில் காத்து நின்றனர்.

அப்போது பலாலி முகாமில்இருந்து மூன்று கவசவாகனங்கள் ஒரு டிரக் சகிதம் நூறு சிப்பாய்கள் நடை பவனியாக காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

சப்டன் கொத்தலாவலை இதற்கு முன்பாக வந்து இதனை புலிகளுக்கு தெரிவித்தார்.

இதனைஅடுத்து புலிகள் சந்தியில் இருந்து 50 யார் தூரம் பின்வாங்கி நின்றனர்.

அவர்களைக் கடந்து சிப்பாய்கள் சென்றதும் புலிகளும் அணிவகுத்துக் காங்கேசன்துறை உப அலுவலகம்நோக்கிச் சென்றனர்.

இதனை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர். (இ-5-10)

### கவின்கலை அரங்க நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், டிச. 28 தமிழர் கலாச்சார அவையினரின் கவின்கலை அரங்கம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணியளவில் யாழ் வின்ஸர் கலையரங்கில் நடைபெறும்.

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவினர் வழங்கும் வி. கே. இரத்தினத்தின் சத்தியவான் சாவித்திரி புராண நாடகம்.

செல்வன் யாதவனின் இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை இடம்பெறும். (இ)

### உண்டியலில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்ளப்பாடு ஆகிய இடங்களில் வழங்கிவருகிறோம்.

7 பாடசாலைகளில் தற்காலிகக் கொட்டில்கள் போட்டு அகதிப் பிள்ளைகளுக்கு இடவசதி செய்து கொடுத்துள்ளோம். அவர்களுக்குக் கல்வி போதிக்க 40 ஆசிரியர்களை புனர்வாழ்வு அமைச்சு கொடுப்பதாகவும் அறிகிறோம்.

தகுதியுள்ள அகதிகளின் பிள்ளைகளில் இருந்து 10 பேரை ஆசிரியர்களாக நியமிக்க முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளருடன் தொடர்புகொண்டுள்ளோம்.

இவைகளைவிட வீட்டில் வேலை ஒன்றும் இல்லாமல் இருக்கும் அகதிகளுக்கு கயிறு திரித்தல் பெருநதிரி செய்தல் ஆகிய பயிற்சிகளை கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். இடம்பெயர்ந்து அகதிகளாக வந்த மரவேலை செய்தவர்கள், சிகை அலங்கார வேலை செய்தவர்கள் விட்ட உபகரணங்களையும் நாம் வாங்கி கொடுத்துள்ளோம். ✱

### பலாலி---

(1 .ம் பக்கத்தொடர்ச்சி)

நின்றனர்.

சிப்பாய்களில் ஒரு பகுதியினர் சிமெந்துத்தொழிற்சாலையின் வடக்குப்புற வாசலில் இரு கவசவாகனங்களுடன் காவல் நின்றனர்.

அவர்களுடன் பொது மக்கள் போராளிகள் சென்று அளவளாவினர்.

சுமார் 12 30 மணியளவில் பேச்சுவார்த்தைகள் முடிந்து குழுவினர் புலிகளின் பிரமுகர்களுடன் வெளியே வந்தனர்.

அவர்களை திரு. ஜெயபாலசிங்கம் அருகில் இருந்த தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி வழங்கினர்.

நண்பகல் 12 45 மணியளவில் நல்லெண்ணக் குழுவினர் வாகனமொன்றில் காங்கேசன்துறை ஹோட்டலுக்கு திரும்பிச் சென்றனர். (இ-10-5)

### விடைத்தாள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களப்பு, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களில் இம்முறை விடைத்தாள் திருத்தும் வேலைகள் நடைபெறவில்லை.

ஜீ. சி. ஈ பரீட்சைப் பெறுபேறுகள் பெப்ரவரி மாதம் வெளியிடப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## அகதிகளை ஏற்றிவர தமிழ்நாட்டுக்கு வள்ளங்கள் இலங்கை அரசு அனுப்பியது

மன்னார், டிச. 28 இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ள இலங்கைத் தமிழர்களில் விரும்புவோரை மீண்டும்இலங்கைக்கு அழைத்து வருமாறு தலைமன்னார் சுங்கப் பகுதிக்கு அரசு உத்தரவிட்டுள்ளது என தெரியவருகிறது.

இதனையடுத்து இப்பகுதியில் இருந்து ஐந்து வள்ளங்கள் தமிழ்நாடு நோக்கி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் புறப்பட்ட இந்த ஐந்து வள்ளங்களுக்கும் விசேஷ 'பாஸ்' வழங்கப்பட்டன. (இ-10)

## காங்கேசன்துறை சிப்பாய்களுக்கு பாண்இல்லை தடையை நீக்க கோருகிறார்கள்

யாழ்ப்பாணம், டிச. 28 காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் ராணுவ முகாமுக்கு பாண் விநியோகம் செய்யப்படுவது நான்கு தினங்களாகத் தடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிப்பாய்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

நேற்றுக் காங்கேசன் துறையில் புலிகள் குழு—அரசக்குழு பேச்சுக்கள் நடைபெற்ற சமயம், சிறிலங்கா சிப்பாய்கள் சிமெந்து தொழிற்சாலை வாசலில் நின்றனர். அவர்களை உதயன் செய்தியாளர் சந்தித்தார்

அப்போதே பாண் விநியோகம் தடை செய்யப்பட்டுள்ள தகவலை சிப்பாய்கள் வெளியிட்டனர்.

புலிகள் தான் பாண் விநியோகத்தைத் தடுத்துள்ளனர் என்று நம்புகிறோம். இது பற்றி அவர்களுடன் பேசுங்கள் இப்படி சிப்பாய்கள் உதயன் செய்தியாளரைக் கேட்டனர்.

சிப்பாய்களின் முறைப்பாட்டை உதயன் செய்தியாளர் புலிகள் தளபதி திரு. கிட்டுவிடம் சமர்ப்பித்தார்.

"வல்வெட்டித்துறை முகாம் சிப்பாய்களுக்கும் நிறுத்தி வைக்கப்பட்ட பாண் விநியோகத்தை நத்தாரில் இருந்து மீண்டும் ஆரம்பித்து உதவினோம்.

அதுபோன்று காங்கேசன்துறை முகாம் சிப்பாய்களுக்கும் புதுவருடத்தில் இருந்து பாண் கிடைக்க நடவடிக்கை எடுப்போம்'' — இப்படி திரு. கிட்டு தெரிவித்தார். (இ-எ-10-5)

## ஜெர்மனியிடமிருந்து 8 பீரங்கிப்படகுகளை வாங்க இலங்கைமுயற்சி

பொன், டிச. 27 கடல்ரோந்தை அதிகரிக்க 8 பீரங்கிப்படகுகளை வாங்கும் இலங்கை அரசின் கோரிக்கை குறித்து மேற்கு ஜெர்மன் அரசு பரிசிலனை செய்கிறது.

இத்தகவலை மேற்கு ஜெர்மன் சஞ்சிகை "குயிக்" வெளியிட்டது.

இலங்கையின் கோரிக்கை மேற்கு ஜெர்மன் அரசின் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுபான்மைத் தமிழருக்கும் பெரும்பான்மைச் சிங்களவருக்கும் இடையே சிவில்யுத்தம்நிலவுகிறது.

பதற்றம் நிலவும் நாடுகளுக்கு ஆயுத விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது மேற்கு ஜெர்மன் அரசுக்கொள்கையாகும்.

இந்த அடிப்படையில் தான் இலங்கை அரசின் கோரிக்கையை எமது அரசு ஆராய்ந்து வருகிறது.

இப்படி மேற்கு ஜெர்மன் வெளிநாட்டமைச்சர் ஹென்ஸ்பீட்றிச் ஹென்சர் தெரிவித்தார் என்று "குயிக்" சஞ்சிகை மேலும் தெரிவித்தது (இ-எ-1)


நினைவில் இருக்கட்டும்,
இன்று யாழ் நகரில் நவீன முறையில்
✱ அமைதியான சூழ்நிலையில்
✱ அன்பான உபசரிப்புடன்
அநுபவம் மிக்கவர்களால் தயாரிக்கப்பட்ட சைனீஸ் உணவு வகைகள்
✱ புரியாணி, ✱ Short-eats ✱ Ice-Cream
வகைகளை உடனுக்குடன் உங்கள் திருப்திக்கேற்றவாறு குறைந்த விலையில் தருபவர்கள்
R.S.R. Green Peking Palace
(CHINESE RESTAURANT)
Also
உங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பை அளிக்க உங்களை வரவழைக்கின்றது Peking Beer Garden Beer with Spanish Omelete 34/- only.
மேலதிக கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.
மேலதிக தகவல்கட்கு;
R. S. R.
Green Peking Palace
ஸ்தாபனத்தார்,
4ஆம் குறுக்குத் தெரு,
(குருநகர் சந்தை முன்பாக)
யாழ்ப்பாணம்,



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீடு திகதி 28 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60, N 86 தொலைபேசி 24805, 22073


## புலிகளின் மோட்டார் சைக்கிளில் கொத்தலாவலை

புலிகளின் மோட்டார் சைக்கிளில் ஏறி ஓடினார் கப்டன் கொத்தலாவலை.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்று காங்கேசன் துறை முகத்தில் இருந்து ஹாபர் வியூ ஹோட்டலுக்கு சிப்பாய்கள் வாகன பவனியாக செல்ல முற்பட்டனர்.

அப்போது வாகன அணிக்கு முன் நடந்து வந்த கொத்தலாவலை புலிகள் பிரமுகர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை வாங்கி காங்கேசன்துறை முகம் வரை சென்று வந்து வாகனத் தொடர் அணியை ஹாபர் வியூ ஹோட்டல் வரை செல்ல விட்டார்.

இதேவேளை விடுதலைப் புலிகளும் வாகனத் தொடரணி செல்வதை சுமார் 50 யார் தொலைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். (இ-5-10)

## இந்தியத் தூதரக அதிகாரி இப்படிச் சொல்கிறார்!

கொழும்பு, டிச. 28 அரசகுழு - புலிகள் சந்திப்பு இலங்கையின் உள்நாட்டு விவகாரம்.

இதுபற்றி சொல்வதற்கு ஒன்றுமே இல்லை.

இப்படி கொழும்பில் உள்ள இந்தியத்தூதரக உயர் அதிகாரி ஒருவர் சொன்னார்

வடபகுதி சென்று புலிகளைச் சந்திக்க அரசகுழு செல்ல இருக்கிறது என்று இலங்கை அரசு எனக்குத் தெரிவித்தது. நான் அதனை இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினேன்.

இதைவிட வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை—

இப்படி இந்தியத் தூதரக உயர் அதிகாரி சொன்னார். (அ-எ)

## அரசுக்கும் தூதுக் குழுவுக்கும் தொடர்பில்லை - அத்துலத்

லண்டன். டிச 28 எட்டியாந்தோட்டை எம். பி. வின்சென்ட் பெரேரா தலைமையிலான நல்லெண்ணக்குழுவுக்கும் இலங்கை அரசுக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

சில தனிப்பட்டவர்கள் மேற்கொண்ட முயற்சி இது.

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பி. பி. சி வானொலிக்குத் தொலைபேசி மூலம் அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

லண்டனில் இருந்து தொலைபேசி மூலம் அமைச்சரின் பேட்டியை பி. பி. சி வானொலி கடந்த வெள்ளிக்கிழமை பதிவு செய்தது.

திரு வின்சென்ட் பெரேரா தலைமையிலான குழு அரசுக்குழு அல்ல. இக் குழுவின் நடவடிக்கைக்கும் அரசுக்கும் தொடர்பே கிடையாதுஎன்றும் திரு. அத்துலத்முதலி பி. பி. சி பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

## புலிகளின் சீருடைப் பொலீஸார் ஜனவரி முதல் சேவை

யாழ்ப்பாணம், டிச. 28 சீருடை தரித்த பொலீஸார் ஜனவரி மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் சேவை புரியவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடை தரித்த பொலீஸாரே ஜனவரி மாதம் முதல் கடமைகளில்ஈடுபடுவர்.

வீதி ஒழுங்குகளைக் கட்டுப்படுத்தல், வாகன நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், தவறுகள் இழைப்போருக்கு அந்த இடங்களில்வந்து அபராதம் விதித்தல் இவர்களது கடமையாக இருக்கும்.

இச்சேவைக்கு அனேகமான இளைப்பாறிய பொலீஸாரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (இ-5-1)

## சர்வோதயக் குழு புலிகளைச் சந்திக்கும்

யாழ்ப்பாண, ம்டிச. 28 சர்வோதயக் குழு புலிகளை விரைவில் சந்திக்கும்.

இவ்வாறு கிட்டு தெரிவித்தார்.

சர்வோதயத்தால் வடக்கு. கிழக்குக்கு அனுப்பி வைக்கப்படும் நிதியை சிங்களமக்களுக்கே இலங்கையிலுள்ள சர்வோதய சபையினர் பாவிக்கின்றனர்.

வரும் நிதியில் 50வீதமாயினும் தமிழ் மக்களுக்குப் பாவிக்கப்படாவிடின் சர்வோதய சபை வடக்குக் கிழக்கில் தடை செய்யப்படும் என இக் குழுவிடம் தெரிவிக்கவுள்ளோம்.

இவ்வாறு கிட்டு தெரிவித்தார். (இ-5-10)

### நிதர்சனம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பளை வல்வெட்டித்துறை வட்டுக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படும்.

கிழமைகளில் மூன்று நாட்களுக்கு மட்டுமே இச்சேவை நடைபெறும்.

ஏறக்குறைய 20 மைல்களுக்கு இதன் ஒளிபரப்பு தெரியக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-5-10)

### புலிகளுடன்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அந்த அடிப்படையில் தான் பேச்சுக்கள் நடைபெற்றன.

கேள்வி: பேச்சுக்கள் பற்றி யாழ்ப்பாண மக்களுக்கு ஏதும் கூற இருக்கிறதா?

பதில்: நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டவே பாடுபடுகிறோம்.

கேள்வி; தமிழரின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தக் கூடிய சமாதானத்தையா?

பதில்: ஆம், ஆம்.

திரு. ஜெயபாலசிங்கம் சுயமரியாதையுடன் ... (இ எ)

### தேடுதல் ரோந்து மீண்டும்

மட்டக்களப்பு, டிச 28 இரண்டுநாள் போர் நிறுத்தத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் தேடுதல், ரோந்து நடவடிக்கைகள் மீண்டும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன

நேற்று ஆயுதப்படையினர் ரோந்து நடவடிக்கையில் அதிகளவில் ஈடுபட்டிருந்தனர். (இ-எ-21)

### செல்வம்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

ருக்கின்றனர்.

உண்ணாவிரதத்தைத் தொடங்குவதற்கு முன்னர் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனை திரு. செல்வம் சந்தித்தார்.

ரெலோ போராளிகள் கைதான விஷயம் பற்றி மறுபரிசீலனை செய்வதாக முதலமைச்சர் உறுதியளித்தார் என்று ரெலோ பேச்சாளர் ஸ்ரீகாந்த் தெரிவித்தார். (இ-எ)

### இலங்கை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வையில் தான் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்'

ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் இருந்து எவரும் எமது அனுமதியுடன் வரின் வரவேற்போம்.

லலித் வருகையை எதிர்ப்போம்

கேள்வி: அமைச்சர் அத்துலத் முதலி வர விரும்பினால்...

திரு. கிட்டு: நிச்சயமாக லலித்தின் வருகையை நாம் எதிர்ப்போம்.

கேள்வி: நல்லெண்ண விஜயத்தின் மூலம் எதை உணர்ந்து கொண்டீர்கள்?

திரு. கிட்டு: இருதரப்பினரும் புரிந்து உணர்வை ஏற்படுத்திக் கொண்டனர். (அ-எ-5-10

### கிரிக்கெட் டெஸ்ட் ஆரம்பம்

புதுடில்லி' டிச 28 இலங்கை இந்திய அணிகளுக்கிடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் நேற்று நாக்பூரில் ஆரம்பமானது.

ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப்பெற்றது.

அதைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது இந்திய அணி. வெளிச்சம் இன்மையால் ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டது (இ)

### கவனமாக போய்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தார்,

நேற்று நடைபெற்ற நல்லெண்ணக்குழு-புலிகளின் சந்திப்பு முடிவுற்று குழுவினர் திரும்புகையிலேயே கிட்டு இவ்வாறு கூறினார்.

கப்டன் கொத்தலாவலை இதைக் கேட்டு சிரித்தபடி கை அசைத்து விடைபெற்றுச் சென்றார். (இ-10-5)

### புலிகளைப் பற்றி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என சிங்கள மக்கள் இப்போது தெரிந்து கொண்டுள்ளனர்.

கைதிகளை சிறப்பாக உபசரித்ததன் மூலம் புலிகளை அவர்கள் போற்றுகிறார்கள்-எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-5-10)

### வணக்கம் சென்று---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடை பெற்றார்.

நேற்று புலிகளின் பிரமுகர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது அங்கே குழுமி நின்ற தமிழ் மக்களைப் பார்த்தே இவ்வாறு அவர் விடை பெற்றார். (இ-10-5)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org